உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தினதமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 19.05.2026 • மலர் 04 • இதழ்: 139 • Edition : Nagercoil • 19.05.2026 • Vol : 04 • Issue : 139 • Page : 4 • Rs. 5/-

சுவீடன் நாட்டின் உயரிய விருது

பிரதமர் மோடிக்கு வழங்கி கவுரவம்

கோதன்பர்க், மே. 19 ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக நெதர்லாந்து நாட்டுக்கு பிரதமர் மோடி சென்றார்.

இந்த பயணத்தின் போது, இரு நாடுகளுக்கு இடையே முக்கிய ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு உள்ளன. அவருடைய பயணம் இன்று நிறைவடைந்ததும் சுவீடன் நாட்டுக்கு புறப்பட்டார்.

அந்நாட்டின் கோதன்பர்க் நகரை சென்றடைந்த பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை அந்நாட்டு அரசியல் மற்றும் வணிக தலைவர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் ஆர்வத்துடன் வரவேற்றனர்.

இந்த பயணத்தில், சுவீடன் பிரதமர் உல்ப் கிறிஸ்டர்சன் மற்றும் பிற ஐரோப்பிய தலைவர்களையும், சுவீடனின் தலைமை செயலதிகாரிகளையும் சந்தித்து, வர்த்தகம், முதலீட்டை வலுப்படுத்தவும் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்புடன் செயல்படுவது பற்றியும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட உள்ளார்.

இதுதவிர செயற்கை நுண்ணறிவு, பசுமை போக்குவரத்து, நவீன உற்பத்தி உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஆலோசனைகளில் ஈடுபட உள்ளார்.

இந்த நிலையில், சுவீடன் நாட்டின் உயரிய, ராயல் ஆர்டர் ஆப் போலார்ஸ்டார்கமாண்டர் கிராண்ட் கிராஸ் என்ற சிறப்புமிக்க விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.

ஒரு நாட்டின் உயரிய தலைமைக்கு வழங்கப்படும் மிக சிறந்த அங்கீகாரம் மற்றும் கவுரவம் ஆகும். உலகளவில் பிரதமர் மோடிக்கு வழங்கப்படும் 31வது பெரிய கவுரவம் இதுவாகும்.

“தவெக ஆட்சியின் முகம் போகப் போக தெரியும்” தஞ்சையில் உதயநிதி பேச்சு

தஞ்சாவூர், மே. 19 “பத்து நாட்களிலேயே மக்கள், பெண்கள், இளைஞர்கள் இந்த ஆட்சியின் உண்மையான முகத்தை உணர்ந்து இருப்பார்கள். போகப் போக இன்னும் பலருக்கு பல உண்மைகள் தெரிய வரும்,” என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

தஞ்சாவூரில் இன்று நடைபெற்ற திருமண விழாவில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், ”தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கான திமுக குடும்பங்கள் இருப்பதால் தான் எவ்வளவு பெரிய புயலை சந்தித்தாலும் நாம் திரும்பதிரும்ப மீண்டும் எழுந்து வருகிறோம். திமுக வெறும் அரசியல் இயக்கம் கிடையாது, வெறும் ஒரு கட்சி கிடையாது. திமுக ஒரு சமுதாய இயக்கம். தேர்தலில் வெற்றி தோல்வி எல்லாம் சகஜம். அது மற்ற கட்சிகளை தான் பாதிக்கும்.

தேர்தல் அரசியலில் தான் நாம் தோற்றுள்ளோம். கொள்கை அரசியலில் திமுக எப்போதும் தோற்காது. ஆளும் கட்சியாக இருந்தபோது மட்டுமல்லாமல், எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் நமக்கு வாக்களித்த வாக்களிக்காத மக்களுக்காகவே நாம் உழைப்போம். தமிழகத்திற்கு வரும் ஆபத்துகளை எல்லாம் நிச்சயம் தடுத்து நிறுத்துவோம். மாநில உரிமைகளை நிச்சயம் காப்போம்.

இந்த பத்து நாட்களிலேயே மக்கள், பெண்கள், இளைஞர்கள் இந்த ஆட்சியின் உண்மையான முகத்தை உணர்ந்து இருப்பார்கள். போகப் போக இன்னும் பலருக்கு பல உண்மைகள் தெரிய வரும். தாயின் பாதுகாப்பில் இருக்கக் கூடிய ஒரு குழந்தை கிளுகிளுப்பை ஆட்டி விளையாட்டு காட்டுபவர்களை பார்த்து மயங்கும். அந்த குழந்தை கிளுகிளுப்பை காட்டுபவர் நிரந்தரமாக இருக்காது. கொஞ்ச நேரத்திற்கு பிறகு குழந்தைக்கு உண்மையான பாசம் எதுவென தெரிந்து தாயின் முகத்தை தேடும். தாயிடம் மீண்டும் வரும்.

அதுபோல இந்த கவர்ச்சி மாயாஜாலத்தை காட்டி மக்களை ஈர்த்துள்ளனர். இந்த கவர்ச்சி மக்களின் கஷ்டங்களை போக்காது. அடிப்படை பணிகளை நிறைவேற்றாது. எந்த பிரச்சனைக்கும் அது தீர்வு காணாது. எனவே தமிழகத்திற்கு தாயாக இருக்கக்கூடிய நமது கழகத்தை மற்றும் தலைவரை நோக்கி நிச்சயம் அந்தக் குழந்தை விரைவில் வரும். சூரியன் ஒரு போதும் மறையாது மீண்டும் உதிக்கும்” இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக பேசிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், “தேர்தலுக்கு முன்பாக மக்களை சந்தித்து பல்வேறு பணிகளை திமுக செய்தது. ஆனாலும் ஏன் ஆட்சிக்கு வர முடியவில்லை?. ஆனால், தேர்தலுக்கு எந்தப் பணிகளையும் செய்யாமல், மக்களை கூட சந்திக்காமல், பாக முகவர்கள், பூத் ஏஜெண்டுகள், வாக்கு எண்ணும் ஏஜெண்டுகள் கூட நியமிக்காமல் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துள்ளார்கள். அது தவறு இல்லை.

அவர்களின் வெற்றிக்கு காரணம் சமூக வலைதளம். இன்ஸ்டாகிராமை பயன்படுத்தி சிறுபிள்ளைகளை, குழந்தைகளை பிரச்சாரம் செய்ய வைத்து, அவர்களின் வீட்டில் உள்ள பெரியவர்கள், பெற்றோர்களிடம் பிரச்சாரம் செய்ய வைத்து திட்டமிட்டு வாக்களிக்க வைத்து ஆட்சிக்கு வந்துள்ளனர். அது நம் கண்ணுக்கு தெரியாமல் போய்விட்டது. இனி நாம் உஷாராக இருந்து அதையும் முறியடிக்க திட்டங்களை தீட்டியுள்ளோம். எனவே நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. மீண்டும் நாம் தான் ஆட்சிக்கு வருவோம் என்று பணியாற்றுங்கள்.” என்று ஊக்கமளிக்கும் வகையில் பேசினார்.

தினதமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

‘அ.தி.மு.க.வினர் ஆதரவு 100 சதவீதம் எடப்பாடி பழனிசாமிக்கு இருக்கிறது’

திண்டுக்கல் சீனிவாசன் பேட்டி

திண்டுக்கல், மே. 19 திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று திண்டுக்கல்லில் உள்ள தனியார் மகாலில் நடைபெற்றது. கூட்டம் முடிந்த பிறகு முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

எடப்பாடி பழனிசாமி தலைமையை ஏற்பவர்கள் அனைவரும் நேற்று நடந்த கூட்டத்தில் கையெழுத்திட்டு இருக்கிறார்கள். எனவே எடப்பாடி பழனிசாமிக்கு அ.தி.மு.க.வினர் ஆதரவு திண்டுக்கல் மாவட்டத்தில் 100 சதவீதம் இருக்கிறது. முன்னாள் அமைச்சர் நத்தம் விசுவநாதன் மீண்டும் எடப்பாடி பழனிசாமி அணியில் இணைவாரா?, இல்லையா? என கேட்கிறார்கள். அதை அவரிடம் தான் கேட்க வேண்டும்.

எடப்பாடி பழனிசாமி தலைமையை ஏற்காதவர்கள் வேறு ஏதாவது ஆதாயம் பெற நினைக்கலாம். அதை அவர்களிடம் தான் கேட்க வேண்டும். என்னிடம் கேட்பது முறையல்ல. நான் ஜோதிடர் அல்ல. எனக்கு தெரியாது. வேறு அணிக்கு சென்றவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய அ.தி.மு.க. தயாராக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறப்பு எப்போது?

முதல்வர் விஜய் ஆலோசனை

சென்னை, தமிழக சட்டசபை தேர்தலில் விஜய் தலைமையிலான த.வெ.க. மகத்தான வெற்றி பெற்று முதல்அமைச்சராக விஜய் பதவியேற்றார். அவருடன் 9 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். இதனையடுத்து அமைச்சர்களாக பொறுப்பேற்றவர்களுக்கு இலாகாக்கள் ஒதுக்கப்பட்டன.

இந்த நிலையில், சென்னை தலைமை செயலகத்தில் இலாகா ஒதுக்கப்பட்ட 9 அமைச்சர்களுடன் முதல்அமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தினார். அமைச்சர்கள் தங்களின் துறைகளில் எப்படி செயல்பட வேண்டும், அரசின் எதிர்பார்ப்பு ஆகியவை குறித்து முதல்அமைச்சர் விஜய் அறிவுறுத்தினார். முதல்அமைச்சருடனான ஆலோசனைக்கு பிறகு துறை சார்ந்த அதிகாரிகளுடன் அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர்.

இதனை தொடர்ந்து கோடைகால விடுமுறை முடிந்து பள்ளிகள் திறப்பு குறித்தும், நாளை மறுநாள் 10ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியீடு தொடர்பாகவும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகனுடன் முதல்அமைச்சர் ஆலோசனை நடத்தி வருகிறார். பள்ளிக்கல்வித்துறையின் செயல்பாடுகள், செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து அமைச்சர், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். இந்த ஆலோசனையில் பள்ளிக்கல்வித்துறை செயலாளர், இயக்குநர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

புதிய பாடத்திட்டத்தில் உருவான 9 பாடப் புத்தகங்கள் அமைச்சர் ராஜ் மோகன் வெளியிட்டார்

சென்னை, மே. 19 பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் அவர்கள் தலைமையில் அரசு கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர். சந்தரமோகன். மற்றும் கல்வி உயர் அலுவலர்களோடு பள்ளிக்கல்வித் துறை சார்பான நடவடிக்கைகள் குறித்த ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வாய்வு கூட்டத்தில் ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்தின் படி உருவாக்கப்பட்டுள்ள ஒன்பது பாட நூல்களை வெளியிட்டார்கள்.

மாணவர்கள் எளிதில் புரிந்து கற்று தனித்திறன் மிக்கவர்களாக உருவாகும் வகையிலும், மாணவர்களிடம் எதிர்நோக்கப்படும் கற்றல் விளைவுகளை அடையும் வகையிலும் இப்பாடநூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைமைய கற்றல் அணுகுமுறையை ஊக்குவிக்கும் வகையில் குழந்தைகள் மிகவும் விரும்பும் கதைகள், பாடல்கள், கற்றல் செயல்பாடுகள் மூலம் கற்கும் வகையிலும், மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையிலும் பாடநூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேலும், மாணவர்களது உடல் இயக்க திறன்கள் (Motor skills), சமூக மனவெழுச்சித் திறன்கள், விழுமிய ங்கள், வாழ்க்கை திறன்களை உள்ளடக்கிய பாடப்பொருட்களோடு அழகிய வண்ண வடிவமைப்புடன் இப்பாட நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2026 – 27 கல்வி ஆண்டில், தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளும் கோடை விடுமுறை க்குப்பின் 1.06.2026 திங்கள் கிழமையன்று திறக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அறிவித்தார்கள்.

பள்ளி திறக்கப்படும் நாளன்று, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு பயின்று வரும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கும் வகையில், தேவையான பாடநூல்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம் மூலம் அச்சிடப்பட்டு மாவட்டங்களுக்கு அனு ப்ப ட்டு தயார்நிலையில் வழங்க உரிய நடவடிக்கை யை மேற்கொள்ள அமைச்சர் அறிவுறுத்தினார்கள்.

இக்கல்வியாண்டில் புதிய பாட புத்தகங்கள் அறிமுகப்படுத்தும் நிலையில், 1 முதல் 3 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு புதிய பாடநூல் மற்றும் கற்பித்தல் நுட்பங்கள் சார்ந்த பயிற்சி 01.06.2026 முதல் 03.06.2026 வரை நடைபெறும் என வும் அறிவித்தார்கள்.

பள்ளிகள் கோடை விடுமுறைக்குப்பின் திறக்கப்ப டவுள்ள நிலையில் அனைத்துப் பள்ளிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்கள்.

▫ 2026-27ஆம் கல்வியாண்டிற்கான விலையில்லா நலத்திட்டங்கள் (பாடபுத்தகங்கள், குறிப்பேடுகள், சீருடை, புத்தக பைகள்) மாணவர்கள் அனைவருக்கும் பள்ளி திறக்கும் நாளன்று கிடைத்திட உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள அனைத்து கல்வி அலுவலர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

▫ பள்ளிகளில் உள்ள திறன் பலகைகள் (Smart Board) மற்றும் உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகங்கள் (HiTech Lab) மாணவர் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் உரிய இணைய வசதியுடன் இருப்பதை உறுதி செய்திட வேண்டும்.

▫ பள்ளி வளாகம், வகுப்பறைகள், சமையலறை, கழிப்பறைகள், குடிநீர் தேக்கத் தொட்டி மற்றும் கை கழுவும் இடம் ஆகியவை தூய்மையாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் தயார் நிலையில் வைத்து இருக்க வேண்டும்.

▫ பள்ளி வளாகத்திலோ அல்லது வகுப்பறைகளிலோ தேவையற்ற/ பயன்பாடற்ற பொருட்கள் இருப்பின் அவற்றினை அப்புறப்படுத்த வேண்டும்.

▫ மாணவர்கள் பயன்பாட்டிற்கான குடிநீர்த் தொட்டியை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து தூய்மையான மற்றும் பாதுகாப்பான குடிநீர் மாணவர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

▫ கழிப்பறைகள் மாணவர்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் தண்ணீர் வசதியுடன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

▫ கழிவுநீர் சேகரிப்பு தொட்டிகள் (Septic Tanks), கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் (Borewell) பள்ளி வளாகத்தில் திறந்த நிலையில் இல்லாதவாறு மூடியிட்டு மாணவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லாத வகையில் பராமரிக்கப்பட வேண்டும்.

▫ தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்யும் மாணவர்களுக்கு EMIS வழியாக உடனடியாக மாற்றுச் சான்றிதழ் வழங்க வேண்டும்.

▫ 202526ஆம் கல்வியாண்டில் ஐந்தாம் வகுப்பு / எட்டாம் வகுப்பு நிறைவு செய்யும் மாணவர்கள் அருகில் உள்ள அரசு / அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளி / உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளிகளில் முறையே ஆறாம் வகுப்பு / ஒன்பதாம் வகுப்பில் சேர்க்கப்படுவதை சார்ந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்திட வேண்டும்.

▫ பள்ளி வளாகத்தில் பெண்குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்திடல் வேண்டும். மேற்காண் அறிவுரைகளை அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களும் பின்பற்றுமாறு தெரிவித்தார்கள். மேலும் அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள்/ மாவட்டக் கல்வி அலுவலர்கள் / மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களும் இதனை கண்காணிக்க வேண்டும் என வும் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம் ச. ஜெயந்தி, மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மருத்துவர் மா. ஆர்த்தி, உறுப்பினர் செயலர், மாதிரிப் பள்ளிகள் இரா. சுதன், (வி. ஓய்வு), பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ் மற்றும் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

ஈரோடு அருகே

காவேரி ஆற்றில் மூழ்கி 3 பேர் சாவு மீன் வலையில் சிக்கி உயிரிழந்த பரிதாபம்

ஈரோடு மே 19

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டை சேர்ந்த விசைத்தறி தொழிலாளி பெருமாள் என்கிற செல்லதுரை (வயது 35). இவர் தனது மனைவி பாரதி (32) மற்றும் இரண்டு மகன்களுடன் பரமத்திவேலூரில் உள்ள மாமியார் வீட்டிற்கு வந்தார்.

இவர்கள் உறவினர்களான இன்ஜினியரிங் கல்லூரி மாணவி பிரதீபா (21) மற்றும் ஸ்ரீமதி ஆகியோருடன் சேர்ந்து ஆறு பேர் ஈரோடு மாவட்டம் பாசூர் காவேரி ஆற்றில் குளிக்கச் சென்றுள்ளனர். ஆற்றில் இறங்கி கைகோர்த்து குளித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக பிரதீபா ஆற்று நீரில் மூழ்கியுள்ளார். அப்போது அவர் மற்றவர்களையும் இழுக்கவே நால்வரும் நீரில் தத்தளித்துள்ளனர். கரையில் இருந்த பெருமாள் அவர்களைக் காப்பாற்ற முயன்றபோது அவரும் ஆற்றில் விழுந்துள்ளார் ஸ்ரீமதியின் அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த பொது மக்களும் மீனவர்களும் ஆற்றில் தத்தளித்த ஸ்ரீமதி மற்றும் இரண்டு சிறுவர்களை பத்திரமாக மீட்டனர் ஆனால் ஆற்று நீரின் அடிப்பகுதியில் இருந்த மீன்பிடி வலையில் சிக்கியதால் பெருமாள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார் மீனவர்களின் உதவியோடு உயிருடன் மீட்கப்பட்ட பாரதி மற்றும் மாணவி பிரதீபா ஆகிய இருவரையும் உடனடியாக தனியார் ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் மாவட்டம் மொளசி பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர் . ஆனால் அந்த ஆம்புலன்சில் அவசர கால ஆக்சிஜன் வசதி இல்லாத காரணத்தால் வழியிலேயே பிரதீபா மற்றும் பாரதி 2 பேரின் உயிரும் பரிதாபமாக பிரிந்தது. மீன்பிடி வலையில் சிக்கியும் ஆம்புலன்சில் ஆக்சிஜன் இல்லாமலும் தம்பதி மற்றும் கல்லூரி மாணவி உள்ளிட்ட மூன்று பேர் உயிரிழந்த சம்பவம் உறவினர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து மலையம்பாளையம் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கர்நாடக மாநிலத்தில் இருந்து தமிழகம் வழியாக

ஸ்ரீபெரும்புதூர் செல்லும் ராஜீவ் காந்தி நினைவு ஜோதிக்கு திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் உற்சாகமான வரவேற்பு

திருப்பூர், மே 19

முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் 35 ஆம் ஆண்டு நினைவு தினம் வரும் 21ஆம் தேதி காங்கிரஸ் கட்சியின் சார்பில் அனுசரிக்கப்படுகிறது. இந்நிலையில் கர்நாடகமாநிலம்பெங்களூரில் இருந்து கடந்த 15 ஆம் தேதி கர்நாடக மாநிலத்தின் காங்கிரஸ் கமிட்டி பொறுப்பாளர் துரை வேலூ தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் ஜோதியுடன் புறப்பட்டனர். 15ஆம் தேதி புறப்பட்ட ஜோதியானது மைசூர், சத்திய மங்கலம் வழியாக திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் வருகை தந்தது. இந்நிலையில் ராஜீவ் காந்தி நினைவு ஜோதியினை திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கோபால்சாமி தலைமையில் வரவேற்பு கொடுத்தனர். தொடர்ந்து முக்கிய சாலைகளின் வழியாக ஜோதியுடன் காங்கிரஸ் கட்சியினர் ராஜீவ் காந்தியின் புகழைப் பாடும் வகையில் கோஷங்களை எழுப்பி ஊர்வலமாகச் சென்றனர். இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் மாநில செயலாளர் செந்தில் குமார், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ராமசாமி, வட்டார தலைவர் கருப்புசாமி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கார்த்திக், ராமகிருஷ்ணன், கோவிந்தசாமி, வெங்கடேஷ், மகிளா, காங்கிரஸ் ஆஷா, வட்டாரம் பாலசுப்பிரமணி ரகுபதி, ஹரிச்சந்திரன், ஜெயராஜ், பழனிச்சாமி, பாஸ்கர், பாபு, யோகநாதன், ஜெயின்லாபு தீன், கோபு, விக்டோரியா, குமார், பாலசுப்பிரமணி, நட்ராஜ், கொண்டப்பன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். மேலும் 200 காங்கிரஸ் மூவர்ண துண்டினை வழங்கினார்கள்..

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. அப்போது மாவட்ட ஆட்சியர் கந்தசாமி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, அவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

திருச்சி: திமுக தோல்விக்கு நேருவே பொறுப்பு.. முன்னால் எம்எல்ஏ கடிதம்



திருச்சி , மே. 19

முன்னாள் எம்எல்ஏ சௌந்திரபாண்டியன், அமைச்சர் கே.என். நேரு தனக்கு கிடைத்த பொறுப்பை ஆணவத்துடன் தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டியுள்ளார். திமுக தொண்டர்களின் கோபத்தையும் மக்களின் சாபத்தையும் சம்பாதித்து கொண்டதன் விளைவாக, திருச்சியில் திமுகவை பலி கொடுத்து விட்டதாகவும், இந்த தோல்விக்கு கே.என். நேரு மட்டுமே பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். இது தனது தனிப்பட்ட கருத்து அல்ல என்றும், தொண்டர்கள் மற்றும் பொது மக்களின் கருத்து என்றும் சௌந்திரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

துறையூர்: கிராவல் மண் எடுத்துச் சென்ற டிராக்டர் டிரைவர் கைது

திருச்சி, மே. 19

திருச்சி மாவட்டம் துறையூர் அருகே கொல்லப்பட்டியைச் சேர்ந்த பிச்சைமுத்து என்பவர், முருகேசன் தோட்டத்திலிருந்து முறையான அனுமதி இன்றி கிராவல் மண் ஏற்றிச் சென்றபோது, காவல் உதவி ஆய்வாளர் ராஜதுரையால் கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. போலீசார் டிராக்டரை பறிமுதல் செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருச்சி மத்திய சிறையில் கைதி தற்கொலை முயற்சி

திருச்சி, மே. 19

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை பகுதியைச் சேர்ந்த நவீன்குமார் (26) வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் விசாரணை கைதியாக அடைக்கப்பட்டார்.

சிறையில் கஞ்சா வைத்திருந்ததாக அவர் அறை எண் 19ல் இருந்து 10ம் எண்ணுக்கு மாற்றப்பட்டார். இது தொடர்பாக சிறை அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்த நவீன்குமார், குளியல் அறை சுவரில் இருந்த ஓடுகளை உடைத்து தன்னைத்தானே கிழித்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். தற்போது அவர் சிறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

களியக்காவிளை போலீஸ் நிலையத்திற்குள் புகுந்து பெண் காவலரை தாக்கிய பெண் மீது வழக்கு

களியக்காவிளை, மே.19

களியக்காவிளை, மேக்கோடு பகுதியை சேர்ந்தவர் ஜோஸ்பின் (38). இவர் நேற்று முன்தினம் களியக்காவிளை காவல் நிலையத்திற்கு சென்றார். அப்போது அங்கு போலீஸ் வனிதா (35) என்பவர் பணியில் இருந்தார். அவரிடம் தன் மீது உள்ள வழக்குகளை முடித்து தர வேண்டும் என கேட்டு ஜோஸ்பின் தகராறு செய்துள்ளதாக கூறப்படுகிறது. அதற்கு வனிதா உயர் அதிகாரிகள் வந்தபின் கேளுங்கள். என்னால் எதுவும் செய்ய முடியாது என கூறியுள்ளார்.

அப்போது ஜோஸ்பின் மேலும் தொடர்ந்து தகராறு செய்து கொண்டு இருந்ததால், காவல் நிலையத்திலிருந்து வெளியே செல்லுங்கள் எனக்கூறி ஜோஸ்பினை பெண் போலீஸ் வனிதா வெளியேற்ற முயற்சித்தார்.

அப்போது ஜோஸ்பின் வைத்திருந்த கிளிப்பால் வனிதா கையை கிழித்ததாக கூறப்படுகிறது. இதில் வனிதா காயமடைந்தார். பின்னர் அங்கிருந்த நாற்காலிகளை கீழே தள்ளிய ஜோஸ்பின், கொலை மிரட்டல் கொடுத்து விட்டு சென்றுள்ளார்.

இது குறித்து வனிதா களியக்காவிளை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோடைக்கால சிறப்பு பயிற்சி முகாம் நிறைவு விழா

திண்டுக்கல், மே 19

திண்டுக்கல் மாவட்டம் விஜி ஸ்போர்ட்ஸ் அகாடமி மற்றும் வள்ளி நாயகி அறக்கட்டளை இணைந்து நடத்திய கோடைகால விளையாட்டு பயிற்சி முகாமின் நிறைவு விழா, திண்டுக்கல் NGO காலனியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் பயிற்சியை முடித்த வீரர் வீராங்கனைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக தேசிய அளவிலான தடைகள் ஓட்டப் போட்டியில் பங்கேற்ற வீராங்கனைகளுக்கு சான்றிதழ்களுடன் விளையாட்டு உபகரணங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன

தேசிய ஹாக்கி விளையாட்டு வீரர் மனிதநேயம் V. ஞான குரு தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், வள்ளிநாயகி அறக்கட்டளையின் தலைவர் PR ஆனந்த் கலந்து கொண்டு வீரர் வீராங்கனைகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் உபகரணங்களை வழங்கினார். மேலும் விழாவில் திண்டுக்கல் மாவட்ட காவல் துறை உதவும் கரங்கள் பொறுப்பாளர் செந்தில்குமார், சமூக ஆர்வலர் தமிழரசி, தடகளப் பயிற்சியாளர் சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்துரை வழங்கினர்.

பயிற்சியில் பங்கேற்ற மாணவ மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் ஏராளமானோர் இந்நிகழ்சியில் கலந்து கொண்டனர்.

இளம் வீர்களை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற இந்த முகாம் அனைவரின் பாராட்டையும் பெற்றது. விழாவின் முடிவில் ஒருங்கிணைப்பாளர் சௌந்தர்ராஜன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

குமரி மாவட்டத்தில்

அரசுப் பள்ளிகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கலெக்டர் பரிசு

நாகர்கோவில், மே.19

குமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2025 2026ம் கல்வியாண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அரசுப் பள்ளிகளில் 12ம் வகுப்பு பயின்று, அதிக மதிப் பெண் பெற்ற மாணவ மாணவியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா பரிசுகள் வழங்கி, வாழ்த்துக்களை தெரிவித்தார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

2025-2026ஆம் கல்வியாண்டில் நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 12ம் வகுப்பு படித்த 10,179 மாணவர்களும், 11,360 மாணவிகளும் என மொத்தம் 21,539 மாணவ மாணவியர்கள் தேர்வு எழுதினார்கள். அதில் 9,780 மாணவர்களும், 11,248 மாணவியர்களும் என மொத்தம் 21,028 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்று தமிழ்நாடு அளவில் 97.63 சதவீதம் பெற்று 3வது இடம் பெற்றுள்ளது. மேலும் அரசு பள்ளிகளில் 2950 மாணவர்களும், 3262 மாணவிகளும் என மொத்தம் 6212 மாணவ மாணவியர்கள் எழுதியுள்ளார்கள். அதில் 2758 மாணவர்களும், 3213 மாணவிகளும் என மொத்தம் 5971 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்று 96.12 சதவீதம் பெற்று தமிழ்நாடு அரசுப்பள்ளிகள் அளவில் நமது மாவட்டம் 5 வது இடம் பெற்றுள்ளது மிகவும் பெருமைக்குரியது. அதனடிப்படையில் இன்று அரசுப்பள்ளியில் 12ம் வகுப்பு பயின்று அதிக மதிப்பெண்கள் பெற்ற கோட்டாறு அரசு மேல்நிலைப்பள்ளியை சார்ந்த மாணவி அக்ஷயா 590, கொட்டாரம் அரசு மேல்நிலை பள்ளி மாணவி அக்ஷயா 589 மதிப்பெண்களும், கன்னியாகுமரி மாவட்ட அரசு மாதிரிப் பள்ளியை சார்ந்த மாணவன் ராகவா ஹரி 586 மதிப்பெண்களும், கன்னியாகுமரி மாவட்ட அரசு மாதிரிப் பள்ளியை சார்ந்த மாணவி பாகிஷியா 581 மதிப் பெண்களும் பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நாகர்கோவில் புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த மாணவன் ஜெய் ரேஷ் பிராங்க் 581 மதிப் பெண்கள் பெற்றுள்ளார்கள். இதற்காக சிறப்பாக பணியாற்றிய மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கல்வி, தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். என கூறினார். நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ஜெயராஜ், நாகர்கோவில் கல்வி அலுவலர் ஜெயராஜ், தனியார் பள்ளிகள் கல்வி அலுவலர் அஜிதா, துணை காவல் கண்காணிப்பாளர் பிச்சையா, தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

தூய்மை பணியாளர்களுக்கு எளிமையான யோகா மற்றும் தியான பயிற்சி!

திருப்பூர் மே:19

திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் சு.சித்ரா தலைமையில் மண்டலம்1, வார்டு23 அவிநாசி ரோட்டில் பங்களா ஸ்டாப் அருகில் உள்ள 23 வது வார்டு அலுவலகத்தில் மன அழுத்தத்தை குறைத்து பணிகளை சிறப்புடன் மேற்கொள்ள HEARTFULNESS என்ற தன்னார்வ அமைப்பின் மூலம் தூய்மை பணியாளர்களுக்கு எளிமையான யோகா மற்றும் தியான பயிற்சி வழங்கப்பட்டது. உடன் சுகாதார ஆய்வாளர் கோகுலநாதன், மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

தென்காசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்காளர்களுக்கு நன்றி

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் தெரிவித்தார்

தென்காசி,மே.19

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணியில்திமுகசார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் தன்னை வெற்றி பெற செய்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தென்காசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார் நன்றி தெரிவிக்க தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலகரம் பகுதிக்கு வருகை தந்த சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவனுக்கு மேலகரம் பேரூர் துணைத் தலைவர் ஜீவானந்தம் தலைமையில் திமுகவினர் பட்டாசு வெடித்து சால்வை அணிவித்து உற்சாக வரவேற்பு கொடுத்தனர் இந்நிகழ்வில் மாநில திமுக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, முன்னாள் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன், ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், முன்னாள் ஒன்றிய செயலாளர் காசி தர்மம் துரை மற்றும் திமுகவைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நாகர்கோவில், மே. 19

நாகர்கோவிலில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் (18.05.2026) நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித் தொகை, விதவை உதவித்தொகை, குடி நீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல் வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 340 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியாளர்கள் சுகிதா (பொது), பத்மபிரியா (நிலம்), துணை காவல் கண்காணிப்பாளர் பிச்சையா, துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

தேனி மாவட்ட கலெக்டர் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி ,மே. 19

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (18.05.2026) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 227 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித் தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 227 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் பொதுமக்களின்கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து, ஆண்டிபட்டி வட்டம் சித்தையன்கவுண்டன்பட்டியை சேர்ந்த பாண்டி என்பவர் கடந்த 30.04.2026 அன்று ஏற்பட்ட இடிமின்னல் தாக்கி உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசு தாரருக்கு பேரிடர் நிவாரணத்தொகையாக ரூ.4,00,000/ பெறுவதற்கான ஆணையினையும் மற்றும் இவர்களது 2 கறவைமாடுகளும் இடிமின்னல் தாக்கி உயிரிழந்ததைத் தொடர்ந்து, பேரிடர் நிவாரணத்தொ கையாக ரூ.75,000/ பெறுவதற்கான ஆணையினையும் ஜானகி என்பவருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கி னார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, உதவி ஆணையர் (கலால்) பஞ்சாபகேசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நாகர்கோவில் நடந்த

இந்திய கிளினிக் மருத்துவர்கள் சங்கத்தின் முப்பெரும் விழாவில் கேரளா மற்றும் தமிழகத்தில் இருந்து ஏராளமான மருத்துவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சி

நாகர்கோவில், மே. 19

நாகர்கோவில் நடந்த இந்திய கிளினிக் மருத்துவர்கள் சங்கத்தின் முப்பெரும் விழாவில் கேரளா மற்றும் தமிழகத்தில் இருந்து ஏராளமான மருத்துவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் போது அதை நீங்கள் ஆவணப்படுத்த வேண்டும் என அரசு ஆயுர்வேதா கல்லூரி முதல்வர் அறிவுரை வழங்கினார்

இந்திய கிளினிக் மருத்துவர்கள் சங்கத்தின் முப்பெரும் விழா நாகர்கோவில் வெட் டூர்ணிமடம் தனியார் அரங்கில் வைத்து நடைபெற்றது .

நிகழ்ச்சியில் மாநில தலைவர் மருத்துவர். பெனிஸ் ராஜா தலைமை தாங்கினார் . மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் விஜய் பிஸ்மர் முன்னிலை வகித்தார் . மாநிலச் செயற்குழு உறுப்பினர் மருத்துவர் ஆல்பர்ட் ரோமண்டோ வரவேற்புரையாற்றினார் . சிறப்பு அழைப்பாளராக அகில இந்திய பொதுச் செயலாளர் சுல்தான் அகமது, கோட்டார் அரசு ஆயுர்வேதா கல்லூரியின் முதல்வர் மருத்துவர் கிளாரென்ஸ் டேவி மற்றும் ஓய்வு பெற்ற மாவட்ட சித்த மருத்துவ அதிகாரி ராபர்ட் சிங் கலந்து கொண்டு முப்பெரும் விழாவின் நோக்கம் குறித்து பேசினர் ,ஓய்வு பெற்ற அரசு சித்த மருத்துவர்தியாகராஜன் மதுரை சித்த வைத்திய சங்கத்தின் தலைவர் மருத்துவர் சோலைமலை வரதராஜன் ,அக்குபஞ்சர் சிச்சியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மருத்துவர் ரபி வார்ம ரமேஷ் பிரபு தமிழ்நாடு மீன் பிடி தொழிற்சங்க கூட்டமைப்பின் மாநில பொதுச்செயலாளர் அந்தோணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் .இந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர்கள் சுனில் பாபு , அப்துல் ரகுமான் ,ஷாஜகான் , பால் மணி ,நாகராஜன் ராமசாமி ,நல்ல முகமது ,ஆகியோர் கலந்த கலந்து கொண்டனர் .நிகழ்ச்சியில் சிறந்த மருத்துவர்களுக்கான கேடயம் வழங்கப்பட்டது

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாநில மக்கள் தொடர்பாளர் ஜெரோம் பிரதாப் சிங் செய்திருந்தார்.பாரம்பரியகலைநிகழ்ச்சி நடைபெற்றது .

இறுதியில் மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் வேல்மணி ராஜன் நன்றி உரையாற்றினார் .

மேயர் (பொ) ஆய்வில் சிக்கிய மாநகராட்சி பூங்காவின் செயலற்ற செயற்கை நீரூற்று

சுத்தம் செய்து செயல்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவு

நாகர்கோவில் மே 19

நாகர்கோவில் மாநகராட்சி பொது மக்கள் மட்டுமல்லாமல் மாவட்டம் முழுவதும் உள்ளவர்களின் முக்கிய பொழுதுபோக்கு பூங்காவாக காணப்படுவது நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான வேப்பமூடு பகுதியில் உள்ள சர்.சி.பி ராமசாமி நினைவு பூங்கா ஆகும் இந்தப் பூங்காவில் உள்ள பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளதாகவும், கண்கவர் பொழுதுபோக்கு அம்சங்களுடன் ஏற்படுத்தப்பட்ட நீரூற்றுப் போன்றவைகள் செயல்படாமல் உள்ளதாகவும் பல்வேறு புகார்கள் மேயர் பார்வைக்கு தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது எனவே நேற்று காலை நாகர்கோவில் மாநகராட்சி (பொ) மேயர் மேரி பிரின்சிலதா மாநகராட்சி பூங்காவிற்கு திடீரென வந்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது பூங்கா அருகிலுள்ள மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர்) மிக அருகில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய கேளிக்கை ராட்டு பாதுகாப்பற்ற முறையில் போடப்பட்டிருப்பதை கண்ட அவர் உடனடியாக அதனை மாற்றி வேறு இடத்தில் நிறுவ உத்தரவிட்டார். அதனைத் தொடர்ந்து பூங்காவின் மின் விளக்குகளையும், சிசிடிவி கேமராக்களையும் பழுது ஏற்படாமல் பாதுகாக்க வலியுறுத்தினார். தொடர்ந்து பூங்காவில் ஆய்வு மேற்கொண்ட அவர் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்த செயற்கை நீர் ஊற்று சிகரம் செயல்படாமலும், சுகாதாரமற்ற முறையில் இருப்பதை கண்ட அவர் உடனடியாக பௌண்டைன் நீரினை மாற்றி, அதனை சுத்தம் செய்து மீண்டும் திறம்பட அந்த பௌண்டைனை செயல்படுத்தி பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு வர உடனடியாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட அவர் மாநகரப் பூங்காவிற்கு உட்பட்ட உரம் தயாரிக்கும் கிடங்கினை ஆய்வு செய்தார் அப்போது தூய்மை பணியாளர்களுக்கு வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட காலை உணவை உண்டு பார்த்து காலை உணவு தயாரிப்பவரிடம் இன்னும் தரமான உணவு வழங்க வேண்டுமென அறிவுறுத்தினார்.அதனைத்தொடர்ந்து பூங்காவில் உள்ள டிஜிட்டல் கோலரங்கத்தை பார்வையிட்ட அவர் அதன் செயல்பாடுகளை கேட்டறிந்தது மட்டுமல்லாமல் உள்ளே அமர்ந்து கோலரங்கத்தில் காண்பிக்கப்படும் காட்சிகளை பார்வையிட்டார். மேலும் பூங்காவை சுத்தமானதாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்கவும் அறிவுறுத்தினார்.

நடைபெற்ற ஆய்வின்போது மாநகர பொறியாளர் ரகுராம், சுகாதார அலுவலர் ஸ்டான்லி குமார், சுகாதார மேற்பார்வையாளர் விக்னேஷ், நாகர்கோவில் மாநகர திமுக செயலாளர் வழக்கறிஞர். ஆனந்த், மாமன்ற உறுப்பினர்கள் மேரி ஜெனட் விஜிலா, விஜிலா ஜஸ்டஸ் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உடன் இருந்தனர்.

நாகர்கோவிலில்

குடிபோதையில் மோதல் வாலிபருக்கு கத்தி குத்து

நாகர்கோவில், மே. 19

நாகர்கோவில் டவுன் ரயில் நிலையத்தை ஒட்டி உள்ள பகுதிகளில் காலி மனைகள் உள்ளன. இந்த பகுதிகளில் தண்டவாளத்தை ஒட்டி இருக்கும் இடங்களில் மாலை வேலைகளில் ஏராளமான கும்பல்கள் அமர்ந்து மது அருந்துவது வாடிக்கையாக உள்ளது. வடசேரி போலீசாரும், ரயில்வே போலீசாரும் தொடர்ந்து எச்சரித்தும் ரோந்து பணிகளில் ஈடுபட்டும் கூட இதை கட்டுப்படுத்த முடியவில்லை.

சில சமயங்களில் போதையில் இந்த கும்பல் தண்டவளங்களில் கற்களை வைத்த சம்பவம் நடந்துள்ளது. ஏற்கனவே இது போன்ற சம்பவங்கள் நடந்து, குற்றவாளிகள் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலையில் கும்பல் கும்பலாக அமர்ந்து அந்த பகுதியில் மது அருந்திக் கொண்டிருந்தனர். அப்போது இரு தரப்பினருடைய வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. சிறு நேரத்தில் கைகலப்பாக மாறி, இதில் வடசேரி கிருஷ்ணன்கோவில் பகுதியை சேர்ந்த ரமேஷ் (26) என்பவருக்கு கத்தி குத்து விழுந்தது. அவர் அதே இடத்தில் ரத்த வெள்ளத்தில் சரிந்தார். உடனடியாக அந்த கும்பல் அங்கு இருந்து தப்பியது. சம்பவம் அறிந்ததும் வடசேரி போலீசார் மற்றும் ரயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். பின்னர் வடசேரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். படுகாயமடைந்த ரமேஷ் குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவசர பிரிவில் உள்ளார். ரமேஷை கத்தியால் குத்திய நபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

மணவாளக்குறிச்சி அருகே விபத்து

ஆஸ்பத்திரி பெண் தொழிலாளி படுகாயம்

குளச்சல், மே. 19

மணவாளக்குறிச்சி அருகே கல்படி பகுதியை சேர்ந்தவர் செல்லப்பன்மனைவிகனகாபாய்(54).இவர்நாகர்கோவில் கோணத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் தொழிலாளியாக பணியாற்றி வருகிறார். சம்பவ தினம் வேலை முடிந்து வீட்டிற்கு செல்ல பஸ்ஸில் ஏறியுள்ளார். பின்னர் திருநயினார் குறிச்சி சந்திப்பில் பஸ்ஸில் இருந்து இறங்கி தனது வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தார். மூங்கில்விளைஎன்றபகுதியில்செல்லும்போதுஅவருக்கு பின்னால் அதி வேகமாக வந்த பைக் ஒன்று அவர் மீது மோதியது. இதில் கனக பாய் தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தார். உடனே அவரை அக்கம்பக்கத்தினர் மீட்டு அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இது குறித்து கனகபாய் மணவாளக்குறிச்சி போலீஸ் நிலையத்தில்புகாரளித்தார்.அதன்பேரில்பைக்விபத்திற்கு காரணமான திக்கணங்கோடு பகுதியை சேர்ந்த ஷைஜு என்பவர் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆட்சியர் ஆய்வு

தருமபுரி மே 19

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அடிப்படை வசதிகள், புற நோயாளிகள் பிரிவு, நோயாளிகள் பதிவு செய்யும் இடம் மருந்தகம், சிகிச்சை பிரிவுகள் மற்றும் கணினியில் நோயாளிகள் விவரங்களை பதிவு செய்வது ஆகியவை குறித்து மாவட்ட ஆட்சியர் சதீஷ் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மருத்துவக் கல்லூரி கண்காணிப்பாளர் சிவக்குமார், உறைவிட மருத்துவ அலுவலர்நாகவேந்தன், குழந்தைகள் நலப்பிரிவு மருத்துவர் ரமேஷ் பாபு ,மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் உடனிருந்தனர்.

கோவையில் ஹர்ஷினி ஜுவல்லர்ஸ் நகை கடை திறப்பு விழா

கோவை மே:19

கோவை டவுன் ஹால் ராஜவீதியில் ஹர்ஷினி ஜுவல்லர்ஸ் நகை கடை திறப்பு விழாவை ஜெயசங்கர், மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஸ்ரீ அன்னபூர்ணா ஹோட்டல்உரிமையாளர்சீனிவாசன்,ரிப்பன்வெட்டி திறந்து வைத்தார்.மேலும் சிறப்பு அழைப்பாளராக ஆர் எஸ் புரம் அக்ஷயா ஹோட்டல் உரிமையாளர் பெருமாள் கலந்து கொண்ட நிகழ்வில் முதல் விற்பனையை தனம் கேட்டரிங் ரஞ்சித் குமார், பெற்றுக் கொண்டார். மேலும் நகை உரிமையாளர் கூறுகையில் மூன்று நாளைக்கு மட்டும் திறப்பு விழா சலுகைகள் இருப்பதாக தெரிவித்தனர்.

மத்திய அரசின் பி.எம்.ஸ்ரீ திட்டத் தையும், மும்மொழித் திட்டத்தையும் த .வெ.க அரசும் ஏற்கக் கூடாது: வைகோ

தஞ்சாவூர் மே 19

மத்தியஅரசின்பிஎம்ஸ்ரீதிட்டத்தையும் , மும்மொழி திட்டத் தையும் த.வெ.க. அரசும் ஏற்கக் கூடாது என்றார் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ.

தஞ்சாவூரில் நடைபெற்ற கல்வி காவலர் பூண்டி கி . துளசி ஐயா வாண் டையார் 5ம் ஆண்டு நினைவு வேந்தல் நிகழ்ச்சியில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் எம். ராமச்சந்திரன் தலைமை வகித்தார் தஞ்சாவூர் தொகுதி மக்களவை உறுப்பினர் ச.முரசொலி, துணை மேயர் டாக்டர்அஞ்சுகம் பூபதி, ஓய்வு பெற்ற காவல் துணை கண்காணிப் பாளர் விஜ யராகவன், கைத்தறி துறை ஓய்வு பெற்ற துணை இயக்குனர் டி எஸ் கே ராஜசேகர் மதிமுக தெற்கு மாவட்ட செயலர்தமிழ்ச் செல்வன் ஆகியோர் புகழஞ்சலி செலுத் தி பேசினார்கள் கல்வி உதவித்தொகை வழங்கி புகழஞ் சலி செலுத்தி மதிமுக பொதுச் செயலா ளர் வைகோ பேசினார். முன்னதாக மேனாள் கல்லூரி முதல்வர் உரு. ராஜேந் திரன்தொகுப்புரை வழங்கினார்

மேனாள் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ் உதயகுமார் அனைவரையும் வர வேற்றார் நிறைவாக வழக்கறிஞர் வெங் கடேசன் நன்றி கூறினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த மதிமுக பொது செயலாளர் வைகோ கூறி யதாவது:

சமூக நீதி, மதசார்பின்மை, ஜனநாய கம், பெண்கள் பாதுகாப்பு, தமிழக வாழ் வாதாரங்களை காக்கும் கடமையை ஆகி யவற்றில் எள்ளளவும் பிசகாமல் முதல்வர் ஜோசப் விஜய் ஆட்சி நடத்த வேண்டும். மத்திய அரசின் பி. எம். ஸ்ரீ. திட்டத்தையோ, மும்மொழி திட்டத்தையோ முந்தைய திமுக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை அதே நிலைப் பாட்டை தான் இந்த அரசின் பின்பற்றும் என நம்புகி றேன், பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துகிறேன்

நீட் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும் அதை மீறி மத்திய அரசு திணித்துக் கொண்டே வருகிறது. 23 லட் சம் மாணவர்கள் இந்த ஆண்டு நீட் தேர் வில் எழுதிய நிலையில் வினாத்தாள் வெளி யாகி, அவர்கள் அனைவரும் மிகுந்த ஏமாற்றத்திற்கும், வருத்தத் திற் கும் ஆளாகியுள்ளனர். இதற்கு பொறுப் பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந் திர பிரதான் பதிவி விலக வேண்டும்

உள்ளாட்சித் தேர்தலில் திமுக அணி வெற்றி பெறும். நெதர்லாந் து ஒப்ப டைத்த ஆனைமங்கலம் செப்பேடுக ளுக்கு முந்தைய தொன் மை செப்பேடு கள் சோழ மண்டலத் திலேயே பல இடங்களில் இருக்கி ன்றன .அவற்றைக் கண்டறிந்து ஆய்வு செய்ய வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உள்ளது, என் றார் வைகோ.

பீம் அறக்கட்டளை மற்றும் தஞ்சை உறவின் முறை சங்கத்தின்

10ஆம் ஆண்டு பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் மற்றும் விருது வழங்கும் விழா

தஞ்சாவூர். மே. 19 .

புதுக்கோட்டை சாலை, குழந்தை ஏசு கம்யூனிட்டி ஹாலில் பீம் அறக்கட் டளை மற்றும் தஞ்சை உறவின் முறை சங்கத்தின்10ஆம் ஆண்டு பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் மற்றும் விருது வழங்கும் விழாவிற்கு தஞ்சாவூர் உறவின்முறை சங்க பொருளாளர் பேராசிரியர் இரா.ரெங்க ராஜன் வரவேற்புரையாற்றினார்.

கா.தங்கராஜ், சந்திரமோகன் ராஜா, இரா.கஜேந்திரன், வ.தனசே கர், சண்முகம், இரா.கண்ணதாசன், கர்ணன், அசோக்குமார், முரளிதர ன், க. ஆனந்தராஜ், து.அர்ஜுன்ராஜ், காசி. ரவிச்சந்திரன், இளந்தமிழன், சிங். சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சாவூர் உறவின் முறை சங்க தலைவர், ராஜாங்கு தலைமை வகித்தார். சங்க செயலாளர் பேராசிரியர் முனைவர் ரெ.சதாசி வம் தலைமை உரையாற்றி னார்.தஞ்சாவூர்மண்டலகல்லூரிக்கல்வி இணை இயக்குனர் முனைவர் அ. குணசேகரன் வாழ்த் துரை யாற்றினார்.

மதுரை மனித உரிமை செயல்பாட்டாளர் மற்றும் எழுத் தாளர் எவிடன்ஸ் கதிர் அம்பேத்கர் விருது பெற்றார்.திருச்சி புற்று நோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர்.க.கோ. ராஜ்வர்தணன் அயோத்திதாசர் விருது பெற்றார் கொட்டங்காடு தமிழக மக்கள் புரட்சி கழகம் மற்றும் அரசியல் தலைவர் அரங்க. குணசேகரன் இரட்டைமலை சீனிவாசன் விருது பெற்றார். விருது பெற்றவர்கள் ஏற்புரையாற்றினார்கள்.

தஞ்சை உறவின்முறை சங்க பொறுப்பாளர் பேரா.முனைவர் நா. சுரேஷ்பாபு நன்றியுரையாற் றினார்.

நாகர்கோவில் அருகே

ரயிலில் பாய்ந்து வக்கீல் குமஸ்தா தற்கொலை

நாகர்கோவில், மே. 19

நாகர்கோவில் கன்னியாகுமரி ரயில் பாதையில் காக்கமூர் ரயில்வே கேட் அருகில் சுமார் 70 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் ரயில் மோதி இறந்த நி லையில் காணப்பட்டார்.திப்ருகார் விரைவு ரயிலின் காலிப் பெட்டிகள் நாகர்கோவில் இ ருந் து கன் னி யா கு மரிக்கு சென்றபோது அவர் ரயிலில் விழுந்து இ றந் த தா க கூ ற ப் ப டு கி ற து .

தகவல் அறிந்த நாகர்கோவில் ரயில்வே போலீசார் சம்பவ இடம் சென்று விசாரணை நடத்தினர். பின்னர் சடலத்தை கைப்பற்றி பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி ம ரு த் து வ ம னை க்கு அனுப்பி வைத்தனர்.

இறந்தவர் யார் என்பது பற்றி நடத்திய வி சா ர ணை யி ல் , இறந்தவர் சுசீந்திரம் தெற்குமண் என்ற பகுதியை சேர்ந்த சசிதரன் நாயர் (74) என்பது தெரிய வந்தது. இவர் கடந்த சில நாட்களாக உடல் நலக்குறைவு காரணமாக அ வ தி ப் ப ட் டு வந்துள்ளதாக தெரிகிறது. தொடர்ந்து அவர் கு டு ம் ப த் தி ன ரு க் கு த க வ ல் தெ ரி வி க் க ப் ப ட் ட து . சசிதரன் நாயர் ரயிலில் விழுந்து தற்கொலை செய்திருக்கலாம் என கூறப்படுகிறது. இது தொடர்பாக போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

தருமபுரி மாவட்ட காச நோய் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் விழா

தருமபுரி மே 19

தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் காசநோய் பிரிவில் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட காசநோய் மருத்துவ பயனாளிகள் 55 பேருக்கு தருமபுரி மண்டல கனரா வங்கி அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட ஊட்டச்சத்து பெட்டகத்தை தருமபுரி மாவட்ட துணை இயக்குனர் மருத்துவ பணிகள் (காசநோய்) மரு.M.பாலசு ப்பிரம ணியம் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார். மேலும் நோயாளிகளின் குடும்பத்தில் உள்ளவர்கள்காசநோய்பரிசோதனைசெய்துகொண்டு நோய் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பிறகு தடுப்பு மாத்திரைகள் எடுத்துக் கொள்ள அறிவுறுத்தினார். சிகிச்சை காலம் முழுவதும் மாத்திரை தவறாமல் எடுத்துக்கொள்ள அறிவுறுத்தினார். 2030 ம் ஆண்டிற்குள் காசநோய் இல்லாத தருமபுரியை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என்று துணை இயக்குனர் கேட்டுக் கொண்டார்.

திருவள்ளூர் வடக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி தமிழக வெற்றிக்கழகம் சார்பில்போட்டியிட்டு வெற்றிப்பெற்ற வழக்கழிஞர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் S.விஜயகுமார் அவர்கள் தனது சொந்த கிராமத்தில் சாமிதரிசனம் செய்து பின்பு பொதுமக்கள் மற்றும் கட்சியினரை சந்தித்து விசில் சின்னத்திற்கு வாக்க ளிமைக்கு நன்றிதெறிவித்தார்,அவருடன் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய இணைச்செயலாளர் அ.ராஜ்குமார் கிளைநிர்வாகிகள் பொதுமக்கள் உடனிருந்தனர்

தருமபுரியில் பள்ளி வாகனங்களை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

தருமபுரி மே 19

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள மைதானத்தில் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர ஆய்வு நடைபெற்றது . இதை மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது தருமபுரி வருவாய் போக்குவரத்து அலுவலகம், பாலக்கோடு அலுவலகம் ஆகிய பகுதிகளுக்கு உட்பட்ட 104 தனியார் பள்ளிகளுக்கான 894 வாகனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வுக்கு கொண்டு வரப்படாத பள்ளி வாகனங்கள் சாலையில் இயக்குவது கண்டறியப்பட்டால் அந்த வாகனத்தை இயக்க தடை பிறப்பிக்கப்படும். மாவட்டத்தின் அனைத்து பள்ளி வாகனங்களும் இம்மாத இறுதிக்குள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று கூறினார். இந்த ஆய்வின்போது காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன், தருமபுரி வட்டார போக்குவரத்து அலுவலர் ஜெய தேவராஜ், தருமபுரி கோட்டாட்சியர் பண்டரிநாதன், மாவட்ட பழங்குடியினர் நல அலுவலர் அசோக் குமார், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ராஜேஷ் கண்ணா, தரணீதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஹெல்மெட் அணியாமல் பைக்கில் பயணித்த பாஜக எம்.எல்.ஏ. அபராதம் விதிப்பு

லக்னோ, மே. 19

உத்தரபிரதேச மாநிலம் டியோரியா தொகுதி பாஜக எம். எல்.ஏ. ஷலப் மணி திரிபாதி. இவர் நேற்று மாலை தனது ஆதரவாளர்களுடன் நெடுஞ்சாலையில் புல்லட் பைக்கில் சென்றார். ஷலப் மணி பைக்கில் ஹெல்மெட் அணியா மல் பயணித்தார். இது தொடர்பான வீடியோ சமூகவலை தளத்தில் வைரலானது. ஹெல்மெட் அணியாமல் சென்ற எம்.எல்.ஏ. மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலரும் சமூகவலைதளத்தில் கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில், ஹெல்மெட் அணியாமல் பைக்கில் பய ணம் செய்த எம்.எல்.ஏ. ஷலப் மணி திரிபாதிக்கு போலீ சார் அபராதம் விதித்துள்ளனர்.

தஞ்சாவூர் பெரிய கோவில் அகழியில் தூர்வாரும் பணி

முரசொலி எம்பி, கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டார்

தஞ்சாவூர் மே 19

தஞ்சாவூர் பெரிய கோவில் அருகே உள்ள அகழியில் புதர்களை அகற்றி தூர் வாரும்படி நடைபெறு வதை முரசொலி எம்பி, கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்

தஞ்சாவூர் பெரிய கோயிலில் அருகே உள்ள அகழியை சீரமைக்கும் வகையில், மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத் துறை சார்பில் கருவேலை மரங்கள், புதர்களை அகற்றி தூர்வாரும் பணி தொடங் கப்பட்டுள்ளது . பொக்லின் ஏந்திரங்கள் மூலம் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன

இந்த பணிகளை முரசொலி எம்பி கலெக்டர்பிரியங்காபங்கஜம் ஆகியோர் அகழி பகுதிக்குச் சென் று நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்..அப்போதுஅவர்கள்பணிகளி ன் முன்னேற்றம், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து அதிகாரி களும் கேட்டது இந்தனர்

இந்த ஆய்வின் போது இந்திய தொல்லியல்துறைமுதுநிலைபராமரிப்பு அலுவலர் சோபிதா மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்பி ன்னர் முரசொலி எம்பி செய்தியாளர்களிடம் கூறுகையில்

தஞ்சாவூர் சுற்றுலா வளர்ச்சிக் காக இந்திய சுற்றுலாத்துறை சார்பில் ரூபாய் 25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது . இந்த நிதியின் மூலம் பெரிய கோவில் கிரிவல பாதைக்கு புதிய டைல்ஸ் அமைத் தல் ராஜ ராஜன் பூங்காவை சீரமைத்து மேம்படுத்துதல் பூங்கா எதிரே உள்ள பார்க்கில் பகுதியை சீரமைத்தல் மற்றும் மின் விளக்கு கள் பொருத்துதல் உள்ளிட்ட பல்

வேறு வசதி வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன

மேலும் பெரிய கோவில் வளாகத்தில் தொல்லியல் துறை சார்பில் சிசிடிவி கேமராக்கள் பொருத்துதல், ஆர் ஓ பிளான்ட் அமைத்தல் ,கழிவறைகள் சீரமைத்தல், போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. அதே போல் ஏடிஎம் எந்திரங்கள் நிறுவுதல், காலணிகள் பாதுகாப்பு அறையை சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளும் மேற்கொள் ளப்பட உள்ளன என்றார்.

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாசில்தார், டிஎஸ்பி, வட்டாட்சிஆணையர் உள்ளிட்ட அலுவலர்களை த வெ கவினர் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர். இதில் மாவட்டதொண்டர் அணி அமைப்பாளர் யாசர் அராபத், முதுகுளத்தூர் ஒன்றிய செயலாளர் குணா விஜித் ராஜ், பேரூர் செயலர் சாகுல் அஜீம் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் சென்றனர். மக்கள் நலன், தொகுதி வளர்ச்சி குறித்து கலந்துரையாடி, அலுவலர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் கூட்டம்

கிருஷ்ணகிரி, மே. 19

கிருஷ்ணகிரி மாவட் டத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடை பெற்று வருகிறது.

அ த ன டி ப் ப டை யி ல் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டு மனைப் பட்டா, விலை யில்லா தையல் இயந்தி ரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித் தொகை, சாலை வசதி மற் றும் மின் இணைப்பு போன்ற பல்வேறு கோரிக் கைகள் குறித்து 406 மனுக் கள் பெற்றுக்கொள்ளப் பட்டது.

இக்கூட்டத்தில் பெற் று க் கொ ள் ள ப் ப ட் ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உட னடி நடவடிக்கை எடுக்க வும், தகுதியில்லாத மனுக் களுக்கு உரிய விளக்கத்தினை மனுதார ருக்கு தெரிவிக்க வேண் டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலை வர் .ச.தினேஷ் குமார் தெ ரி வி த் த ா ர் . இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் . அ . சாதனைக்குறள், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் .அபிநயா, மாவட்ட ஆட் சியரின் நேர்முக உதவியா ளர் நிலம் .தர்மராஜ் மற் றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.